Volume 6 Special Issue 1 November 2024 E-ISSN: 2582-2063

# சரித்திரநாயகிகள் அன்னிபெசன்ட் அம்மையார் மற்றும் பண்டிதரமாபாய் ஆகியோரின் சமூகப் பணிகள்

**முனைவர் வீ. ரோஜா**
*இணைபேராசிரியர் மற்றும் வரலாற்றுத்துறை தலைவர்*
*சீதாலெட்சுமி ஆச்சி மகளிர் கல்லூரி, பள்ளத்தூர், சிவகங்கை மாவட்டம்*

**ஆய்வுச்சுருக்கம்**

*பெண்ணியத்தின் உயர்வில் தான் நாட்டின் உயர்வு இருக்கிறது என்று உணர்ந்து நாட்டிற்க்காகவும் பெண்ணியத்தின் உரிமைக்காகவும், உயர்வுக்காகவும் பாடுபட முன்வந்த பெருமாட்டிகள் பலர். அவர்களில் டாக்டர் அன்னிபெசண்ட் அம்மையார், பண்டிதரமாபாய் போன்றோர் பெண்ணினத்திற்காக பாடுபட்ட சமூகசேவகிகள் ஆவார்கள்.*

*அன்னிபெசன்ட் அம்மையார் தன்னை ஒரு இந்தியர் என்று அறிவித்துக் கொண்ட அயர்லாந்து பெண்மணி. அன்னிபெசன்ட் அம்மையார் தன்னுடைய விடாமுயற்சியால் தனத 40 வது வயது முதல் அவருடைய கவனம் சமூகப் பணியில் சென்றது. "நியூமால் தூசியன் அமைப்பு" என்ற சீர்திருத்தச் சங்கத்திற்கு தலைவியானார். மேலும் "லிங்க" என்ற பெயரில் பத்திரிக்கையை தொடங்கி அயர்லாந்திலும், இந்தியாவிலும் பெண்களுக்கான விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவாக கட்டுரைகளை எழுதினார். பிரம்மஞானசபையின் உறுப்பினரானார். முதல் தடவையாக இந்தியா வந்தடைந்த அன்னிபெசன்ட் அம்மையார் இந்தியாவில் காணப்பட்ட சமூகசீர்கேடுகள், அரசியல் குறைபாடுகள் ஆகியவற்றைக் களைய வேண்டுமென்பதில் கவனம் செலுத்தினார். பாரத் மற்றும் கைட் அசோஷியேசன் (Bharat Scout and Guide Association) இவரால் உருவாக்கப்பட்டது. இவர் 1916 இல் தன்னாட்சி இயக்கத்தை (Home Rule Movement) ஆரம்பித்தார். இந்திய விடுதலைக்காக பாடுபட்ட ஒரு புரட்ச பெண்மணி அன்னிபெசன்ட் அம்மையார் அவர்கள்.*

*பண்டிதரமாபாய் டோங்கிரே ஒரு சமூக சீர்திருத்தவாதி. இவர் பெண்களின் முன்னேற்றத்திற்காகப் படுபட்ட இவர் எழுத்தறிவு இயக்கத்தின் முன்னோடியாக திகழ்ந்தவர். பண்டிதரமாபாய் சமஸ்கிருதத்தில் புலமை பெற்றதால் பண்டிதர் என்னும் பட்டத்தை ெற்றார். கல்கத்தா பல்கலைக்கழகப் பேராசிரியர்களால் தேர்வு செய்யப்பட்டு சரஸ்வதி" என்ற பட்டமும் இவருக்கு வழங்கபட்டது. இவர் பெண்கள் விடுதலைக்காகவம், உரிமைக்காகவும் பெண்கள், கல்விக்காவும் பாடுபட்டவர். பெண்களுக்காக ஆரியமகிளசமாஜம் என்ற சங்கத்தை நிறுவினார். பாலியத் திருமணத்திலிருந்து பெண்களைக் காப்பதும், பெண்களுக்கு கல்வியறிவு கற்பிப்பதும் இச்சங்கத்தின் நோக்கங்களாக கூறப்பட்டது. பண்டிதரமாபாய் அமெரிக்காவிலும், கனடாவிலும் சுற்றுப்பயணம் செய்து அங்கு பல இடங்களில் பெண்களக்க ஆதரவாக சொற்பொழிவு ஆற்றியுள்ளார். இவர் பல நூல்களை எழுதியுள்ளார். மேல் ஜாதி இந்துபெண்கள் (The High Caste, Hindu Women) என்னும் நூலையும், மராத்திய மொழியில் பாலோதியான் என்ற நூலையும், லோக்ஸ்திரி என்ற நூலையும் எழுதி வெளியிட்டார். மேலும் இவர் விதவைகள் மற்றும் ஒதுக்கப்பட்ட பெண்களுக்காக சாரதாசதன் என்ற அமைப்பை உருவாக்கினார். இவர்கள் இருவரும் நாட்டிற்காக மட்டுமல்லாமல் பெண்ணுரிமைக்காகப் போராடிய வீராங்கனையாக எழுச்சி பெற்று, பெண் சீர்திருத்தவாதியாக இருந்து வருகிறார்கள்.*

**முன்னுரை**

19ஆம் 20ஆம் நூற்றாண்டுகளில் இந்தியத் திருநாட்டில் பெண்ணினம் வேகமக முன்னேற்றத்தைக் கண்டது. தனிப்பட்ட பெண்கள் பலர் தனது அருங்செயல்களால் முன்னோடிகளாக திகழ்ந்தனர். பெண்ணியத்தின் உயர்வில் தான் நாட்டின் உயர்வு இருக்கிறது என்று உணர்ந்து நாட்டிற்க்காகவும் பெண்ணியத்தின் உரிமைக்காகவும், உயர்வுக்காகவும் பாடுபட முன்வந்த பெருமாட்டிகள் பலர். அவர்களில் அன்னிபெசன்ட் அம்மையார், பண்டிதரமாபாய், மூவலூர் இராமாமிர்தம் அம்மையார், டாக்டர் எஸ்.தர்மாம்மாள், இந்திராணி பாலசுப்பிரமணியம், பண்டிகை அசலாம்பிகை அம்மையார், பண்டிகை கிருஷ்ணவேணி அம்மையார், வீரமங்கை வேலுநாச்சியார், டாக்டர் முத்துலெட்சுமிரெட்டி அம்மையார் போன்றோர் பெண்ணினத்திற்காக பாடுபட்ட சமூகசேவகிகள் ஆவார்கள். அவர்களுள் அன்னிபெசன்ட் அம்மையார், பண்டிதரமாபாய் குறிப்பிடத்தக்கவர்.

**அன்னிபெசன்ட் அம்மையார்**

**அன்னிபெசன்ட் அம்மையாரின் வாழ்க்கை வரலாறு**

அன்னிபெசன்ட் அம்மையார் அவர்கள் ஒரு சாதரண ஐரியக் குடும்பத்தில் அக்டோபர் 1 ம் தேதி 1847ஆம் ஆண்டு லண்டனில் பிறந்தார். தனது ஐந்து வயதில் தந்தையை இழந்த இவர் தனது 19 ம் வயதில் 1867 லில் பிராங்க் பெசண்ட் என்ற 26 வயது உள்ளமத குருவை மணந்துடிக்பி, மேபேல் என்ற இரண்டு பெண் குழந்தைகளைப் பெற்றெடுத்தார்கள். பின்னர் தன் கணவர் அன்னிபெசன்ட் அம்மையாரை கோயிலுக்குச் செல்லும் படியும், கிறிஸ்வ மத கொள்கைக்கு ஏற்ப நடக்கும் படியும் கட்டாயப்படுத்தினார். ஆகையால் அன்னிபெசன்ட் அம்மையார் அவர்கள் 1873 இல் தனது கணவரை விட்டு பிரிந்து வாழ முடிவெடுத்தார். கணவரிடமிருந்து பிரிந்த இவர் நிறைய கட்டுரைகளை எழுதினார். பின்னர் பெண்களின் விடுதலைக்காக போராடி பல சமூகசீர் திருத்தங்களை செய்த இவர் செப்டம்பர் 20, 1933 ஆம் ஆண்டு தனது 87ம் வயதில் சென்னை அடையாறில் காலமானார்.

**அன்னிபெசன்ட் அம்மையாரின் சமூகத் தொண்டு**

தன்னை ஒரு இந்தியடாம் டாம் என்று அறிவித்துக் கொண்ட அயர்லாந்து பெண்மணி அன்னிபெசன்ட் அம்மையார் தனது வழ்வின் ஆரம்ப நிலையிலேயே பல எதிர்ப்புகளையும் முட்டுக் கட்டைகளையும் சந்தித்ததால் தன்னுடைய விடா முயற்சியால் தனத 40 வது வயது முதல் அவருடைய கவனம் சமூகப் பணியில் சென்றது. தனது எண்ணங்களுக்கு பிராட்லாவின் நேஷனல் ரிஜிஸ்டர் (National Register) என்ற பத்திரிக்கை வாயிலரக எழுத்து வடிவம் தந்தார். 1874 முதல் பெண்களின் அரசியல் நிலை பற்றி பேசிலானார். பின்னர் நியூமால் தூசியன் அமைப்பு என்ற சீர்திருத்தச் சங்கத்திற்கு தலைவியானார். மேலூம் லிங்க் என்ற பெயரில் பத்திரிக்கையை தொடங்கி அயர்லாந்திலும், இந்தியாவிலும் விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவாக கட்டுரைகளை எழுதினார். இவர் எடின்பரோ மற்றும் பிற இடங்களில் உள்ள சேரிப் பகுதிகளில் வாழ்ந்து வந்த ஏழ்மை மக்களின் வாழ்க்கையை கண்டுமனம் வருந்தினார். இந்த நேரத்தில் தான் இங்கிலாந்திலேயே இருந்து கொண்டு இந்தியாவிற்கு தன்னாட்சி வழங்கப்பட வேண்டும் என்று முழக்கமிட்டார்.

**அன்னிபெசன்ட் அம்மையாரின் பிரம்மஞான சபை**

அன்னிபெசன்ட் அம்மையாருக்கு The Secret Doctrine என்ற நூலை எழுதிய பிளேவட்ஸ்கி அம்மையாரை 1889 லில் பாரிஸில் சந்திக்கும் வாய்ப்புக் கிடைத்தது. இந்த சந்திப்பு அன்னிபெசன்ட் அம்மையாரின் வாழ்க்கையில் பெரும் மாறுதலை ஏற்படுத்தியது. பின்னர் பிளேவட்ஸ்கியின் பிரம்மஞானசங்கத்தின் உறுப்பினரானார். 1891 இல் பிளேவட்ஸ்கி இறந்ததைத் தொடர்ந்து பிரம்மஞானசபையின் சார்பில் 1893 இல் சிகாகோவில் இடம்பெற்ற உலக கொலம்பிய கண்காட்சியில் கலந்துகொண்டார்.

பின்னர் 1893 இல் பிரம்மஞானசபையின் உறுப்பினராக முதல் தடவையாக இந்தியா வந்தடைந்த அன்னிபெசன்ட் அம்மையார் இந்தியாவில் காணப்பட்ட சமூக சீர்கேடுகள், அரசியல் குறைபாடுகள் ஆகியவற்றைக் களைய வேண்டுமென்பதில் கவனம் செலுத்தினார். இந்தியா வந்த அன்னிபெசன்ட் அம்மையார் சென்னையில் அடையாரில் பிரம்மஞானசங்கத்தின் தலைமை நிலையத்தை நிறுவி அச்சபையின் தலைவரானார். இந்து சாஸ்த்திரங்களை ஆழ்ந்துபடித்து பல நூல்களை எழுதியுள்ளார். மேலும் பகவத் கீதையை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தார். பின்னர் காசியில் சில காலம் தங்கி அங்கு இந்து சமய விளக்கங்களை முறைப்படிகற்றார். அதன் பிறகு இந்திய உடை அணிந்து இந்துவாகவே வாழ்ந்து இந்திய மக்களுக்கு பல தொண்டுகளை செய்துள்ளார். இந்தியத் தத்துவத்தைப் பலரும் புரிந்து கொள்ள வேண்டுமென்பதற்காக சென்னை, வாரணாசி ஆகிய இடங்களில் இந்து உயர்நிலைப் பள்ளிகளை ஏற்படுத்தினார். அது பின்னர் மோகன் மாளவியாவினால் பெனராய் இந்து பல்கலைக்கழகமாக ஆக்கப்பட்டது. பாரத் மற்றும் கைட் அசோஷியேசன் (Bharat Scout and Guide Association) இவரால் உருவாக்கப்பட்டது.

**இந்திய விடுதலைப் போராட்டத்தில் அன்னிபெசன்ட் அம்மையார்**

அன்னிபெசன்ட் அம்மையார் இயற்கையிலேயே ஒரு புரட்சி மனப்பான்மை கொண்டவர். ஆகையால் ஆங்கிலேயர்களின் அடக்குமுறை அவரை வெகுவாகப் பாதித்தது. விடுதலை போராட்டத்திற்கு ஆதரவாக பிறநாடுகளைப் போல் இந்தியாவிற்கும் டொமினியன் அந்தஸ்து வழங்கப்பட வேண்டுமென்று 1914 இல் காமன் வீல் என்ற வாரப் பத்திரிக்கையையும், 1915 ஜுன் 14 இல் சென்னையில் இருந்து நியூ இந்தியா என்ற பெயரில் நாளேடு ஒன்றை ஆரம்பித்து நடத்தினார். அது இந்திய மக்களிடையே தேசீய விழிப்புணர்வை ஏற்படுத்தியது. 1914 இல் முதல் உலகப் போர் தொடங்கிய பொது இங்கிலாந்தில் அவர் பயணம் செய்து கொண்டிருந்தார். இங்கிலாந்தின் தேவை, இந்தியாவுக்கு ஒரு வாய்ப்பு என்று அறிவித்தார். போர்க்களத்தில் ஆங்கிலேயர்களுக்குத் தேவைப்படும் உதவிகளைச் செய்வதன் மூலம் இந்தியா சுய ஆட்சிபெற முயல வேண்டும் என்று அறிவித்தார். 1907 இல் சூரத் நகரில் நடைபெற்ற இந்திய காங்கிரஸ் மாநாட்டில் கலந்து கொண்டு அம்மாநாட்டில் காங்கிரசில் ஏற்பட்ட பிரிவினையை சீராக்கி பன்னர் திலகர் போன்றவர்களை மீண்டும் காங்கிரசில் சேரவகை செய்தார். 1916 இல் லக்னோவில் ஏற்பட்ட மாநாட்டில் காங்கிரஸ் மூலம் காங்கிரஸ் முஸ்லீம் லீக் கட்சி உடன்பாடுக்கான வகை செய்து அதில் வெற்றியும் கண்டார்.

இவர் 1916 இல் தன்னாட்சி இயக்கத்தை (Home Rule Movement) ஆரம்பித்தார். அவரது தன்னாட்சி பிரச்சாரம் இந்திய மக்களிடையே தேசீய விழிப்புணர்வை ஊட்டியது. இதனால் ஆங்கிலேய அரசு இந்தியாவை விட்டுவெளியேறும்படி அன்னிபெசன்ட் அம்மையாரை கேட்டுக் கொள்ளப்பட்டதை ஏற்கமறுத்ததால் இவர் ஊட்டியில் சிறை வைக்கப்பட்டார். அதன் பின்னர் 1917 இல் கல்கத்தாவில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் மகாசபையின் தலைவராக்கப்பட்டார். இவ்வாண்டில் தான் அடையாறில் உள்ள கையெழுத்துச் சுவடி நூலகத்தை ஏற்படுத்தினார். லாகூரில் ஜவகர்லால் நேருவின் தலைமையில் 1929 இல் கூடிய காங்கிரஸ் மாநாட்டில் முழுமையான சுயாட்சிகோரி அறிக்கை வெளியானது. அதில் கூறப்பட்ட கருத்துக்கள் அன்னிபெசன்ட் அம்மையாரின் கொள்கைக்கு மாறாக இருந்தது. ஆகையால் இவர் மகாத்மா காந்தியின் சத்தியாக்கிரக இயக்கத்தில் சேராமல் காங்கிரசை விட்டு விலகி இருந்தார். 1929 இல் பொதுநலவாய இந்தியா என்ற பெயரில் ஒரு அறிக்கையை எழுதி இங்கிலாந்து நாடாளுமன்றத்திற்கு அனுப்பினார். இவர் இந்தியா மட்டுமல்லாமல் இங்கிலாந்துக்கு பயணம் மேற்கொண்டபோது அங்கும் இந்திய விடுதலைக்கு ஆதரவாக பொது மேடைகளில் உரையாற்றி இந்திய விடுதலைக்காக பாடுபட்ட ஒரு புரட்சி பெண்மணியாக வளம் வந்தார் அன்னிபெசன்ட் அம்மையார்.

**பண்டிதரமாபாய்**

**பண்டிதரமாபாயின் வாழ்க்கை வரலாறு**

பண்டிதரமாபாய்டோங்கிரே ஏப்ரல் 23, 1858 ஆம் ஆண்டு கர்நாடக மாநிலத்தில் உள்ள கனரா மாவட்டத்தில் மராத்தி பேசும் ஒரு பிராமண குடும்பத்தில் சமஸ்கிருத அறிஞரான அனந்த் சாஸ்திரிடோங்ரேவுக்கும், லட்சுமிபாய்டோங்ரேவுக்கும் மகளாக பிறந்தார். தனது தந்தையிடமிருந்து சமஸ்கிருத்தை கற்றுக்கொண்டார். வேதத்தை பெண்கள் கற்று கொள்ளக்கூடாது என்பதை ஏற்க மறுத்த சாஸ்த்திரிகள் தன் மனைவி, இரண்டு பெண் குழந்தைகளுக்கும் சமஸ்கிருதத்தை கற்றுகொடுத்தார். இதனை ஏற்காத சமூகம் இவர் குடும்பத்தை தள்ளி வைத்தது. 1877 இல் வறட்சியில் பெற்றோரை இழந்தரமாபாய் தன் சகோரருடன் தன் தந்தை விட்டு சென்ற பணியை செய்து வந்தார். சமஸ்கிருதத்தில் புலமை பெற்றதால் பண்டிதர் என்னும் பட்டத்தை ெற்றார். கல்கத்தா பல்கலைக்கழகப் பேராசிரியர்களால் தேர்வு செய்யப்பட்டு சரஸ்வதி என்ற பட்டமும் இவருக்கு வழங்கபட்டது. 1880 ஆம் ஆண்டு நவம்பர் 13 ஆம் தேதி வங்காள வழக்கறிஞர் பிபின்கரிமெதிலி என்பவரைவை தீக முறைப்படி அல்லாமல் துணிச்சலாககலப்பத் திருமணம் செய்துகொண்டார். இவர்களுக்க மனோரமா என்ற பெண் குழந்தை பிறந்தது. பின்னர் திருமணமான இரண்டு வருடத்திலேயே கணவனையும் இழந்து விட்டார். பல சமூகப் பணிகளை செய்த இவர் பம்பாயில் ஏப்ரல் 5ஆம் தேதி 1922 ஆம் ஆண்டுதனது 63 வயதில் காலமானார்.

**பண்டிதரமாபாயின் சமூகத்தொண்டு**

பண்டிதரமாபாய் ஒரு சமூகசீர்திருத்தவாதி. இவர் பெண்களின் முன்னேற்றத்திற்காகப் படுபட்ட இவர் எழுத்தறிவு இயக்கத்தின் முன்னோடியாக திகழ்ந்தவர். இந்தியப் பெண்களின் விடுதலை இயக்கத்திற்கு அடித்தலம் அமைத்து தந்தவர் பண்டிதரமாபாய்.

பண்டிதரமாபாய் தன் தந்தையுடன் வெளியே பயணம் செய்த போது பெண்கள் படும் கொடுமைகளையும் துன்பங்களையும் நேரில் கண்டு மனம் வருந்தினார். தனது பதினாறாம் வயதில் தந்தையை இழந்த இவர் இந்தியா முழுவதும் சுற்றுப் பயணம் மேற்க்கொள்ளும்போது ஏராளமான குழந்தை விதவைகளைக் கண்டார். இதற்குக் காரணமான குழந்தை மணமுறையை ஒழிக்கவேண்டும் என்று நினைத்தார். ஒன்பது வயதுபெண் ஒருத்தி தன்னுடைய கணவன் இறந்த போது அவனுடைய சிதையில் உயிரை மாய்த்துக் கொள்ள முயன்றபோது அவளைக் காப்பாற்றினார். தனது தந்தையார் தனது 16 வது வயதில் காலமான போது அவருக்கு தேவையான கடமைகளை பண்டிதரமாபாயால் சரி வர செய்ய முடியவல்லை. அதனால் பண்டிதரமாபாயின் தாயார் லெட்சுமி பாய் இறந்தபோது தன் தாயின் உடலைச் சுமந்து சென்று சிதையிட தனக்கு உரிமை உண்டு என்று ஆணுடன் சம உரிமை கொண்டாடி புரட்சி செய்தவர் பண்டிதரமாபாய். இவர் பெண்கள் விடுதலைக்காகவும், உரிமைக்காகவும், பெண்களின் கல்விக்காவும் பாடுபட்டவர். இந்திய நாட்டு விடுதலை இயக்கத்தில் பங்கு பெற்றவர். 1889 இல் நடைபெற்ற காங்கிரஸ் மாநாட்டிற்கு அழைக்கப்பட்டிருந்த பத்து பெண்மணிகளில் இவரும் ஒருவராக இருந்தார். தன் கணவர் 1882 இல் இறந்த பின்னர் ரமாபாய் பூனா நகருக்குச் சென்று அங்கு பெண்களுக்காக ஆரியமகிளசமாஜம் என்ற சங்கத்தை நிறுவினார். பாலியத் திருமணத்திலிருந்து பெண்களைக் காப்பதும், பெண்களுக்கு கல்வியறிவு கற்பிப்பதும் சங்கத்தின் நோக்கங்களாகக் கூறப்பட்டது. பண்டிதரமாபாய் அமெரிக்காவிலும், கனடாவிலும் சுற்றுப்பயணம் செய்து அங்கு பல இடங்களில் பெண்களுக்கு ஆதரவாக சொற்பொழிவு ஆற்றியுள்ளார். இவர் பல நூல்களை எழுதியுள்ளார். மேல் ஜாதி இந்துபெண்கள் (The High Caste, Hindu Women) என்னும் நூலையும், மராத்தியமொழியில் பாலோதியான் என்ற நூலையும், லோக்ஸ்திரி என்ற நூலையும் எழுதிவெளியிட்டார். மேலும் இவர் விதவைகள் மற்றும் ஒதுக்கப்பட்ட பெண்களுக்காக சாரதாசதன் என்ற அமைப்பை உருவாக்கினார். சாரதா என்ற மறுமணம் செய்து கொண்ட விதவைப் பெண்ணை அவ்வமைப்பின் முதல் உறுப்பினராகச் சேர்த்து புரட்சி செய்தார். அவ்வமைப்பின் உறுப்பினர்களுக்குதையல் வேலை, மட்பாண்டங்கள் செய்தல், தோட்ட வேலை என பல தொழில்களில் பயிற்சியளிக்கப்பட்டது. மேலும் இவர் கோதுபாய் என்ற விதவையை அன்னைசாகேப் கார்வே என்பவருக்கு திருமணம் செய்து வைத்து புரட்சியை ஏற்படுத்தினார். 1919 இல் இவரது பொது சேவையை பாராட்டி பிரித்தானிய அரசால் கெய்சர் இ ஹிந்து என்ற விருது வழங்கப்பட்டது. பெண்களின் முன்னேற்றத்திற்காக இவர் ஆற்றிய சேவையைப் பாராட்டி இந்திய அரசு 1989, அக்டோபர் 26 இல் இவர் படத்துடன் அஞ்சல் தலை வெளியிட்டுள்ளது. பம்பாய் நகரில் ஒரு சாலைக்கு இவர் பெயரிடப்பட்டுள்ளது. அவரது அன்பும் பாசமும் பலருக்கு முன்னோடியாக அமைந்தது. இவருடைய செயல்கள் பெண்களை முன்னேற்றப் பாதைக்கு கொண்டு சென்றன.

**முடிவுரை**

இவர்கள் இருவரும் நாட்டிற்காக மட்டுமல்லாமல் பெண்ணுரிமைக்காகவும் போராடிய வீராங்கனையாக எழுச்சி பெற்று, பெண் சீர்திருத்தவாதியாக இருந்து, இன்று பெண்ணுரிமையின் விடி வெள்ளியாகத் திகழ்கின்றார்கள். இவர்கள் மறைந்தாலும் இவர்களின் வாழ்வு பெண் குலத்திற்கெல்லாம் வழிகாட்டியாக என்றும் மறக்க முடியாத மங்கையர்களாக இருக்கின்றார்கள்

**மேற்கோள்கள்**


1. திருநாவுக்கரசு, க. (1983). *திராவிட இயக்கவேர்கள்*. மணிவாசகர் பதிப்பகம்.
2. திருவேங்கிமலைசரவணன். (2008). *மறக்கமுடியாத மங்கைகள்*. குமுதம் புத்தகம் வெளியீடு.
3. நாஞ்சில் ஸ்ரீவிஷ்ணு. (2007). *சரித்திரம் படைத்த சாதனைப் பெண்மணிகள்*. ராஜ குமாரி பப்பிளிகேசஷன்.
4. குமரவேலன், இரா. (1981). *இந்திய சமுதாய சீர்திருத்தச் செம்மல்கள்*. தமிழ்நாடு அரசு முதல் வெளியீடு.
5. ஜினராராஜாதாசா. (1996). *அன்னிபெசண்டின் ஒரு சிறு வாழ்க்கை வரலாறு*.
6. ராஜதுரை, எஸ். வி. & கீதா, வி. (1995). நூறு ஆண்டுகள் பிராமினீட்யூட் அன்னிபெசண்டின் வருகை. *பொருளாதார மற்றும் அரசியல் வார இதழ்*.
7. Mehta, S. (1982). *Revolution and the Status of Women*.
8. Rajendran, L. (1984). *Mahalie Manam Karanthamuthu*.
9. Chattapadhaya, K. (1983). *Indian Women's Battle for Freedom*.
10. ஸ்டாலின் குணசேகரன், த. (1998). *தேச விடுதலையும் தியாகச் சுடார்களும்*. கற்பகம் புத்தகாலயம்.